# இலங்கைத் தீவில் தமிழரின் ஆட்சியும் மாட்சியும்

பௌத்த நெறியை மேன்மைப் படுத்துவதற்காக எழுதப்பட்ட மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டே தமிழர் தம் தொன்மையை எடுத்துக் காட்டிவிட முடியும். குறிப்பாக விசயன் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கல்யாணி, நாகதீபம் ஆகிய பகுதிகளில் தமிழர் மரபினரான இயக்கர், நாகர்களின் ஆட்சி நிலவியதை மகாவம்சம் எடுத்துக் கூறுகின்றது.

கி.மு 237 இல் சேனன், குத்திகன் ஆகிய தமிழ் மன்னர்கள் சூரதீசன் என்ற சிங்கள மன்னனை வென்று ஆட்சியைக் கைப்பற்றினான். 22ஆண்டுகள் நல்லாட்சி புரிந்த இவர்கள் பௌத்த நெறியினையும் பேணி வந்தனர். பின்னர் அசேல மன்னன் இவர்களை வெற்றி கொண்டான். இதன் பின்னர் கி.மு 205 இல் அசேலனை வெற்றி கொண்ட எல்லாளன் 44 ஆண்டுகள் நீதியான ஆட்சி புரிந்தான். இவனது ஆட்சியில் அநுராதபுரத்துக்குத் தெற்கே 32 தமிழ் சிற்றரசுகள் இருந்தன என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இதன் பின்னர் உருகுணை அரசனான துட்டகெமுனு சூழ்ச்சிப் போரில் எல்லாளனை வெற்றி கொண்டான்.

கி.மு 237 தொடக்கம் கி.மு.44 வரை 193 ஆண்டுகளில் 88 ஆண்டுகளுக்கு மேல் தமிழ் மன்னர்கள் அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். அநுராதபுரம் தவிர வேறு பல பகுதிகளிலும் தமிழர் ஆட்சி நிலவியதை மகாவம்சத்தினூடாக அறியமுடிகின்றது.

சோழ மன்னனான கரிகாற்சோழன் தமிழகத்தில் கல்லணை கட்டுவதற்காகச் சிறைப்பிடித்துச் சென்ற பன்னீராயிரம் சிங்களவரை மீட்டுவரும் போது பன்னீராயிரம் தமிழர்களை சிங்கள மன்னனான கயபாகு அழைத்து வந்து குடியேற்றியதாக ‘பூசாவலி’ எனும் நூல் கூறுகின்றது.

கி.பி 237 இல் சிங்கள மன்னனான அபயநாகன் தமிழர்களை அணிதிரட்டி அநுராதபுரத்தைக் கைப்பற்றி எட்டு ஆண்டுகள் ஆட்சி செய்தான்.

கி.பி 436 இல் பண்டுபாரிந்தன், குட்டபாரிந்தன், கிரிதரன், தாடிகன், பீடிகன் ஆகிய தமிழ் மன்னர்கள் அநுராதபுரத்தைக் கைப்பற்றி 27 ஆண்டுகள் ஆட்சி நடாத்தினர். கி.பி 463ல் காசியப்பன் தன் தந்தையான தாதுசேனனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான். பின்னர் இவனது தமையனான மொகல்லாளன் தமிழர்படையின் உதவியுடன் காசியப்பனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான்.

கி.பி 623 தொடக்கம் 691 வரை தமிழ்ப் படைகளின் உதவியைப் பெறுவதே இலங்கைத் தீவின் ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்ற நிலை காணப்பட்டது.